
**டிசம்பர் – 03**

# TNPSC துளிகள்

- உலகளாவிய பாதுகாப்புத் துறையில் மேஜர் ஜெனரல் அல் ரைசி மேற்கொண்ட சிறப்பான தலைமைத்துவத்தை அங்கீகரிப்பதற்காக அவருக்கு இன்டர்போல் பதக்கம் வழங்கப் பட்டது.
    - 1923 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து இன்டர்போல் அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் அரேபியர் மற்றும் மத்திய கிழக்கிலிருந்து இன்டர் போலின் முதல் தலைவர் அல் ரைசி ஆவார்.
- இந்தியாவின் 'எறிகணைப் பெண்மணி' டெஸ்ஸி தாமசிற்கு, பாதுகாப்பு அறிவியல் துறையில் ஆற்றிய முன்னோடியாகச் செயல்பட்ட பங்களிப்பிற்காக டாக்டர் பௌலோஸ் மார் கிரிகோரியஸ் விருது 2025 வழங்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## முத்துசாமி தீட்சிதரின் 250வது பிறந்தநாள்




- 2025 ஆம் ஆண்டு ஆனது கர்நாடக இசையின் மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதரின் 250வது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- அவர் 1775 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் திருவாரூரில் பிறந்தார்.
- அவர் சுமார் 229 பாடல்களை உருவாக்கியதாக அறியப்படுகிறது; அவற்றில் பல சங்கீத சம்பிரதாய பிரதர்ஷினியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- அவர் விளம்ப கலா எனப்படும் மிதமான மற்றும் விரிவான இசை கட்டமைப்புகளைப் பயன்படுத்தி சமஸ்கிருதத்தில் இசையமைத்தார்.
- பிருந்தாவன சாரங்கம், த்விஜவந்தி, யமுனா கல்யாணி, மணிரங்கு, நாராயண கவுளா போன்ற ராகங்களில் அவர் இயற்றிய இசையமைப்புகள்/பாடல்கள் அவற்றின் அமைப்பை நிறுவ உதவியது.

- ஹேமாவதி, குமுதக்ரியா, நாக காந்தாரி போன்ற சில ராகங்கள் முக்கியமாக அவரது கிருதிகள் (இசையமைப்புகள்) மூலம் நன்கு அறியப்பட்டன.
- கர்நாடக இசை ஆய்வுகளின் மையமான கமலாம்பா நவாவரணா மற்றும் அபயம்ப விபக்தி தொடர்கள் போன்ற முக்கிய படைப்புகளை அவர் உருவாக்கினார்.
- 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட குருகுஹாம்ருதா என்ற இசை இயக்கம் ஆனது, அதன் தனித்துவமான ராகங்கள் மற்றும் இசை பாணியை வெளிப்படுத்த இந்தக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்கிறது.

# தேசியச் செய்திகள்

## இராஜ் பவன்களின் பெயர் மாற்றம்

**இனி ராஜ்பவன் இல்லை!**

**2024ம் ஆண்டு நடந்த ஆளுநர்கள் மாநாட்டில் 'ராஜ் பவன்' என்ற சொல் காலனியாதிக்கத்தை நினைவூட்டுவதால், ராஜ்பவன்களை 'லோக் பவன்' எனப் பெயர் மாற்றிட பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, அனைத்து ஆளுநர் அலுவலகங்களும் 'லோக் பவன்' மற்றும் 'லோக் நிவாஸ்' என பெயர் மாற்றம் செய்ய அறிவுறுத்தப்படுவதாக உள்துறை அமைச்சகம் அறிவிப்பு.**

- உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, அனைத்து ஆளுநர்கள் மற்றும் துணை நிலை ஆளுநர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளது.
- பழைய பெயரில் "காலனித்துவ" தொடர்பு இருப்பதால், இராஜ் பவன்களை லோக் பவன்கள் என்று மறுபெயரிட பரிந்துரைத்தது.
- துணை நிலை ஆளுநரின் இல்லமான இராஜ் நிவாஸை லோக் நிவாஸ் என்று மறு பெயரிடவும் அது பரிந்துரைத்தது.
- கடிதம் கிடைத்த உடனேயே மேற்கு வங்காளம் மற்றும் லடாக் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டன.
- இராஜ் பவன் ஒரு மாநில ஆளுநரின் அதிகாரப்பூர்வ இல்லமாகும் என்ற நிலையில் இராஜ் நிவாஸ் ஓர் ஒன்றியப் பிரதேச துணை நிலை ஆளுநரின் இல்லமாகும்.

## HAL-GE தேஜாஸ் Mk1A எஞ்சின் ஒப்பந்தம்

- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது, GE ஏரோஸ்பேஸ் நிறுவனத்துடன் 113 ஜெட் என்ஜின்களுக்கான 1 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- F404-GE-IN20 என்ற எஞ்சின்கள், தேஜாஸ் இலகுரக போர் விமானமான (LCA) Mk1A ஜெட் விமானங்களுக்கு இயக்க ஆற்றலை அளிக்கும்.
- இந்திய விமானப் படைக்கு (IAF) 97 தேஜாஸ் Mk1A ஜெட் விமானங்களை பெறுவதற்கான 62,370 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

- தேஜாஸ் Mk1A என்பது வான் வழிப் பாதுகாப்பு, கடல்சார் உளவு மற்றும் தாக்குதல் பணிகளுக்கான ஒற்றை எஞ்சின் கொண்ட பல பயன்பாட்டுப் போர் விமானமாகும்.




## சர்வதேசச் செய்திகள்

### FATF சொத்து மீட்பு குறித்த புதிய வழிகாட்டுதல்





- மோசடி, இணையவெளிக் குற்றம், முதலீட்டு மோசடிகள் மற்றும் பணமோசடி போன்ற குற்றங்களிலிருந்து சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான புதிய உலகளாவிய வழி காட்டுதலை நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழு (FATF) வெளியிட்டது.
- இந்த வழிகாட்டுதல் ஆனது சொத்துக்களைக் கண்டறிதல், அவற்றை முடக்குதல், அவற்றை நிர்வகித்தல் மற்றும் நாடுகள் முழுவதும் அவற்றைத் திருப்பி அனுப்புதல்

ஆகிய முழு செயல்பாட்டு சுழற்சி முறையை விளக்குகிறது.

- FATF ஆனது அக்ரி கோல்ட், இந்தியா ரியாலிட்டி & இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ஆப்பர்சினுயூட்டிஸ் (IREO) ரியாலிட்டி மோசடி மற்றும் பிட்கனெக்ட் கிரிப்டோ மோசடி வழக்குகள் ஆகிய இந்தியாவின் வழக்கு உதாரணங்களை உள்ளடக்கியது.
- இந்தியாவின் ரோஸ் வேலி வழக்குகள் போன்றவை இங்கு உதாரணமாக குறிப்பிடப் பட்டதுடன், இந்தப் புதிய விதிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துகின்றன.
- FATF என்பது பணமோசடி, தீவிரவாதத்திற்கான நிதியுதவி மற்றும் சட்டவிரோத நிதி நடவடிக்கைகளைத் தடுக்க 1989 ஆம் ஆண்டில் பாரிசில் உருவாக்கப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.

## முதல் BIMReN மாநாடு




- BIMReN என்பது வங்காள விரிகுடாவின் பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு-இந்திய கடல்சார் ஆராய்ச்சி வலையமைப்பு என்பதைக் குறிக்கிறது.
- இதன் முதல் மாநாடு கொச்சியில் நடைபெற்றது.
- BIMReN, BIMSTEC நாடுகளிடையே கூட்டுக் கடல் சார் ஆராய்ச்சி, நிலையான மீன்வளம் மற்றும் கடல் சார் பொருளாதார முன்னெடுப்புகளை ஊக்குவிக்கிறது.
- இந்த முன்னெடுப்பானது, 2022 ஆம் ஆண்டு கொழும்பு BIMSTEC உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமரால் அறிவிக்கப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் (MEA) தொடங்கப்பட்டது.
- கடல் சார் சுற்றுச்சூழல் அமைப்பு ஆனது ஆரோக்கியம், பெருங்கடல் கண்காணிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த கடல் சார் புத்தாக்கம் மற்றும் நிலையான கடல் ஆளுகையில் இளைஞர்களின் ஈடுபாடு ஆகியவை இதில் கவனம் செலுத்தும் பகுதிகளில் அடங்கும்.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் 500 கிமீ குவாண்டம் வலையமைப்பு




- குவாண்டம் குறியாக்கப் பகிரல் நுட்பமானது (QKD) இரகசிய குறியாக்க விசைகளை பாதுகாப்பாகப் பகிர்ந்து கொள்ள குவாண்டம் இயற்பியலைப் பயன்படுத்துகிறது.
- இந்த வலையமைப்பினை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) தேசிய குவாண்டம் திட்டத்தின் (NQM) கீழ் QNu லேப்ஸ் பிரைவேட் லிமிடெட் உருவாக்கியது.
- இது ஃபோட்டான்களை (ஒளி துகள்கள்) ஒளியிழைகள் மூலம் அனுப்பி, தரவை குவாண்டம் பிட்களாக (குபிட்கள்) குறியாக்கம் செய்கிறது.
- ஃபோட்டான்களை இடைமறிக்கும் எந்தவொரு முயற்சியும் அவற்றின் நிலையை மாற்றுவதால், தொடர்பு கொள்ளும் தரப்பினருக்கு இது எச்சரிக்கை அளிக்கிறது.
- 500 கிமீ வலையமைப்பு நம்பகமான முனைகள், குவாண்டம் சுரக்சா கவாச் வன்பொருள் மற்றும் குறியாக்கத்திற்காக குவாண்டம் ரேண்டம் எண் உருவாக்க (QRNG) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

## ஈர்ப்பு அலை GW250114 கண்டுபிடிப்பு



GW250114: COSMIC CARILLON OF CHAOS

On the 10th anniversary of the detection of gravitational waves, the LIGO, Virgo and KAGRA (LVK) collaborations report a new signal from merging black holes: GW250114. The black holes were strikingly similar (in their masses and distance) to those observed in LIGO's first detection, in 2015: GW150914. But, after 10 years of improvements to both the global network of gravitational-wave detectors and the methods used to analyze their data, LVK researchers were able to "hear" GW250114 three times as clearly as that pioneering first detection. With this unprecedented observation, LVK researchers have confirmed that black holes only ever grow in size and that, when disturbed, they ring like a bell with the "sound" predicted by Einstein.



**Figure 1**: (Adapted from Figure 1 of our publication.) The gravitational wave event GW250114 observed by the LIGO Hanford (left panel) and LIGO Livingston (right panel) detectors. The two plots show how the gravitational wave strain produced by the event in each LIGO detector varied as a function of time (in seconds) and frequency (in hertz, or number of wave cycles per second). Both plots show the frequency of GW250114 sweeping sharply upwards, in a chirp-like pattern, from roughly 30 Hz to 250 Hz over two tenths of a second.

- GW250114 என்பது இரண்டு கருந்துளைகளின் இணைப்பிலிருந்து வரும் ஈர்ப்பு அலை நிகழ்வாகும்.
- ஒவ்வொரு கருந்துளையும் சூரியனின் நிறையில் சுமார் 30 மடங்கு அதிகமாக இருந்தது.
- இந்த இணைப்பானது 1.3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு சுழலும் கருந் துளையை உருவாக்கியது.
- இந்த சமிக்ஞை இது வரையில் பதிவு செய்யப்பட்டவற்றில் மிகவும் தெளிவான மற்றும் வலிமையான ஈர்ப்பு அலையாகும்.
- இந்த நிகழ்வு ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருந்துளைப் பகுதி தேற்றத்தை உறுதிப்படுத்தி, இணைப்பிற்குப் பிறகு மொத்த கருந்துளை எல்லைப் பகுதி அதிகரித்ததைக் காட்டுகிறது.


## சன்கேட்சர் திட்டம்




- விண்வெளியில் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் தரவு மையங்களை உருவாக்கும் சன்கேட்சர் திட்டத்தை கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.
- பூமியில் பயன்படுத்தப்படும் ஆற்றலையும் நீரையும் சேமிப்பதற்காக இந்தத் தரவு மையங்கள் சூரிய சக்தியில் இயங்கும் செயற்கைக் கோள்களாக செயல்படும்.
- வினாடிக்குப் பல்லாயிரக்கணக்கான டெராபிட்களில் தரவை மாற்ற அவை வடம் சார்ந்த ஒளியிழை இணைப்புகளைப் பயன்படுத்துகின்றன.
- விண்வெளி அடிப்படையிலான டென்சர் செயலாக்க அலகு (TPU) வன்பொருளை சோதிக்க 2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு முன்மாதிரி செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த கூகுள் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- விண்வெளி சார் சூரிய மின் உற்பத்தித் தகடுகள் பூமியில் உள்ளதை விட 8 மடங்கு அதிக திறன் கொண்டவையாகும்.

- ட்ரில்லியம் v6e எனப்படும் TPU என்பது கதிர்வீச்சு எதிர்ப்பு மற்றும் தீவிரச் சூழல்களிலுமான செயல்திறனுக்காக பரிசோதிக்கப்படுகின்றன.

## நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்





- உலக சுகாதார அமைப்பானது, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) 2021 ஆம் ஆண்டில் 3.5 மில்லியன் இறப்புகள் பதிவாகும் என்பதுடன் உலகளவில் பதிவாகும் மரணத்திற்குகான நான்காவது முக்கிய காரணமாக அமையும் என்று கூறுகிறது.
- நிரந்தர நுரையீரல் சேதத்தால் ஏற்படுகின்ற COPD ஆனது சுவாசிக்கும் செயல் முறையை கடினமாக்கக் கூடிய நுரையீரல் நோயாகும்.
- இதில் நாள்பட்ட மூச்சுக்குழாய் அழற்சி (காற்றுப்பாதைகளின் வீக்கம்) மற்றும் எம்பிஸிமா (காற்றுப் பைகளுக்கு சேதம்) என்ற இரண்டு முக்கிய வகைகள் உள்ளன.
- இந்தப் பாதிப்பிற்கான முக்கியமான காரணங்களில் புகைபிடித்தல், உட்புறக் காற்று மாசுபாடு, இரசாயனப் புகை அல்லது தூசி பாதிப்பு மற்றும் அரிய மரபணுக் கோளாறுகள் ஆகியவை அடங்கும்.
- இதன் அறிகுறிகளில் சளியுடன் கூடிய இருமல், மூச்சுத் திணறல், மூச்சிரைப்பு, மார்பு இறுக்கம் மற்றும் அடிக்கடி ஏற்படும் தொற்றுகள் ஆகியவை அடங்கும்.
- COPD ஆனது, கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்களில் (11%) அதிக பாதிப்பு கொண்டு உள்ளதுடன் (5.6%) இந்தியாவில் 37.6 மில்லியன் மக்களைப் பாதிக்கிறது.


## நரம்பியல் தொழில்நுட்பத்திற்கான யுனெஸ்கோ வழிகாட்டுதல்கள்

- யுனெஸ்கோ நரம்பியல் தொழில்நுட்பத்தின் நெறிமுறைகள் குறித்த அதன் முதல் உலகளாவியக் கட்டமைப்பை வெளியிட்டது.
- நரம்பியல் தொழில்நுட்பம் என்பது மனித மூளை உள்ளிட்ட நரம்பியல் அமைப்புகளை அணுகி, மதிப்பிடும் மற்றும் செயல்படும் சாதனங்கள் மற்றும் நடைமுறைகளைக் குறிக்கிறது.
- இந்தக் கட்டமைப்பு அரசியல், மருத்துவம் மற்றும் வணிகச் சூழல்களில் மனித மூளைத் தரவை தவறாகப் பயன்படுத்துவதிலிருந்துப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது நன்மை, தொடர்பு, தீங்கு விளைவிக்காமை, தன்னாட்சி, பாகுபாடு இல்லாமை, பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை போன்ற கொள்கைகளை வலியுறுத்துகிறது.

- இந்தக் கட்டமைப்பு பொது மற்றும் தனியார் துறைகளில் பொறுப்பான ஆராய்ச்சி மற்றும் புதுமை (RRI) ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.
- பாதுகாப்பான மற்றும் நியாயமான நரம்பியல் தொழில்நுட்ப மேம்பாட்டினை உறுதி செய்ய திறந்த அறிவியல் மாதிரிகள் மற்றும் நெறிமுறை சார் சுய-ஒழுங்குமுறையை இது பரிந்துரைக்கிறது.




## BICAN ஆராய்ச்சி




- BICAN என்பது மேம்பட்ட புதுமையான நரம்பியல் தொழில்நுட்பங்கள் முன்னெடுப்பு உயிரணு/செல் விவரக் குறிப்பு வலையமைப்பு மூலமான மூளை ஆராய்ச்சி என்பதைக் குறிக்கிறது.
- இது அமெரிக்க தேசிய சுகாதார நிறுவனங்கள் (NIH) அமைப்பின் BRAIN/மூளை முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.

- மேம்பட்டு வரும் மனித மூளையின் விவரக் குறிப்புகளின் முதல் வரைவை ஆராய்ச்சியாளர்கள் நிறைவு செய்தனர்.
- வளர் நிலை கரு மற்றும் முதிர் கரு நிலைகளில் இருந்து முதிர்வயது வரை பல்வேறு வகையான மூளை செல்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் முதிர்ச்சியடைகின்றன என்பதை இந்த ஆய்வு விளக்குகிறது.
- ஆட்டிசம் மற்றும் ஸ்கிசோஃப்ரினியா போன்ற மூளை தொடர்பான பாதிப்புகளைப் புரிந்துகொள்ள உதவுவதை இந்தக் கண்டுபிடிப்புகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- BICAN என்பது நரம்பியல் அறிவியலாளர்கள், கணிப்பு உயிரியலாளர்கள் மற்றும் திறந்த அணுகல் மூளை விவரக் குறிப்பினை உருவாக்குகின்ற மென்பொருள் பொறியாளர்களின் கூட்டு முன்னெடுப்பாகும்.


## செயற்கை நுண்ணறிவு சார் கணினி முறையை மேம்படுத்தல் – அயர்ன்வுட்




- கூகுள் நிறுவனமானது அயர்ன்வுட் என்ற புதிய கணினி சில்லினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- அயர்ன்வுட் என்பது செயற்கை நுண்ணறிவு (AI) பணிகளுக்காக வடிவமைக்கப்பட்ட 7வது தலைமுறை நுட்பம் சார் டென்சர் செயலாக்க அலகு (TPU) ஆகும்.
- இது தகவல்களை உருவாக்கப் பெரிய மொழி மாதிரிகள் (LLM) மற்றும் நிபுணர்களின் கலப்புகள் (MoE) ஆகியவற்றிற்கு உகந்ததாக உள்ளது.
- TPU ஆனது 42.5 எக்ஸாஃப்ளாப்ஸ் கணினி சக்தியை வழங்கி, ஒரு பாட் ஒன்றுக்கு 9,216 சில்லுகளின் செயல்பாட்டை ஆதரிக்கிறது.
- அயர்ன்வுட் மேம்பட்ட திரவக் குளிரூட்டலைப் பயன்படுத்துகிறது என்பதோடு மேலும் முந்தையத் தலைமுறை சார் நுட்பத்துடன் ஒப்பிடும்போது ஒரு வாட் ஒன்றுக்கு இரு மடங்கு செயல்திறனை வழங்குகிறது.
- TPU ஆனது செயற்கை நுண்ணறிவிற்கான சிறப்புச் செயலிகள், CPU (மைய செயலாக்க அலகு) மற்றும் GPU (கிராபிக்ஸ் செயலாக்க அலகு) ஆகியவற்றை விட திறம் மிக்கவை, மேலும் தேடல், YouTube மற்றும் DeepMind போன்ற கூகுள் சேவைகளில் பயன்படுத்தப் படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அமுர் பருந்துகள்





- ❖ டிட்வா புயல் ஆனது இரண்டு பெண் அமுர் பருந்துகளை/வல்லூறுகளை அவற்றின் வழக்கமான வலசைப் பாதையிலிருந்து விலக்கி தமிழ்நாட்டின் கோடியக்கரை பாதையில் தள்ளியது.
- ❖ இந்தப் பறவைகள் வழக்கமாக சைபீரியா, வடக்கு சீனா மற்றும் மங்கோலியாவில் இருந்து தென்னாப்பிரிக்காவிற்கு சுமார் 40,000 கி.மீ தூரம் பயணிக்கின்றன.
- ❖ அவற்றின் பொதுவான இந்திய வலசைப் பாதை குஜராத்-மகாராஷ்டிரா வழியாகும்.
- ❖ கோடியக்கரையில் முன்னதாக 2020 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மற்ற புயல்களின் போது அமுர் பருந்துகளின் இயக்கம் பதிவானது.
- ❖ அமுர் பருந்துகளானது, சிறிய கொன்றுண்ணிகள் மற்றும் IUCN அமைப்பின் கீழ் தீ வாய்ப்பு கவலை குறைந்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ❖ அவை இடம்பெயர்ந்த இனங்கள் பற்றிய உடன்படிக்கையின் (CMS) பிற்சேர்க்கை II மற்றும் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் IV ஆம் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

## பொன்னிற குள்ளநரி வளங்காப்புத் தூதர்கள் திட்டம்

- ❖ தென்காசி வனப் பிரிவு ஆனது பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் 'பொன்னிற குள்ளநரி வளங்காப்புத் தூதர்கள்' திட்டத்தைத் தொடங்குகிறது.
- ❖ கட்டுமானப் பணிகள் மற்றும் புதர்கள் மற்றும் காடுகள் இழப்பு காரணமாக பொன்னிற நரிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அவற்றைப் பாதுகாப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- ❖ மாணாக்கர்கள் இதில் பயிற்சி பெற்று, பொன்னிறக் குள்ள நரிகளைப் பாதுகாப்பது மற்றும் காயமடைந்த விலங்குகள் காட்டிற்குத் திரும்ப உதவுவது குறித்து விழிப்பு உணர்வைப் பரப்புவார்கள்.
- ❖ இந்தத் திட்டம் கீரி, எறும்பு திண்ணிகள், ஆமை, பாம்புகள் மற்றும் உடும்புகள் போன்ற

பிற சிறிய வனவிலங்குகள் பற்றிய விழிப்புணர்வையும் உள்ளடக்கியது.

- இந்த மாதிரியானது கிராமவாசிகளை முன் எச்சரிக்கைகள் மற்றும் காடுகளுக்குள் உணவு உருவாக்கத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் மனித-யானை மோதலைக் குறைத்து உள்ள 'யானைகளின் நண்பர்கள்' திட்டத்தைப் பின்பற்றி தொடங்கப்பட்டது.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## FSAP அறிக்கை 2025

- இந்த அறிக்கை உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
- நிதித் துறை மதிப்பீட்டுத் திட்டம் (FSAP) என்பது 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பாகும்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் 30 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை அடைய நிதித் துறை சீர்திருத்தங்களை துரிதப்படுத்துவதற்கு இந்த 2025 ஆம் அண்டு அறிக்கை இந்தியாவை வலியுறுத்தியது.
- 2017 ஆம் ஆண்டில் 144% ஆக இருந்த சொத்துக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 175% ஆக உயர்ந்துள்ளதுடன் இந்தியாவின் நிதி அமைப்பு வலுவானதாகவும் பன்முகத் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
- டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு ஆனது இந்தியாவில் அணுகல், செயல்திறன் மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்தியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் ஒழுங்குமுறை முன்னேற்றம் மேற்பார்வையை வலுப்படுத்தியுள்ளது என்றாலும் வங்கி சாரா நிதி நிறுவனங்களில் (NBFC) மேற்பார்வை சார்ந்த சவால்கள் உள்ளன.
- பத்திரச் சந்தைகளை மேம்படுத்துதல், தனியார் மூலதனத்தைத் திரட்டுதல், NBFC ஒழுங்குமுறையை வலுப்படுத்துதல், டிஜிட்டல் சீர்திருத்தங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் பசுமை நிதியை நன்கு ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்த அறிக்கையானது

பரிந்துரைக்கிறது.




## முக்கிய தினங்கள்

### இரசாயனப் போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவு தினம் 2025 - நவம்பர் 30




- இந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையால் (ஐ.நா) அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகிறது.

- முன்னதாக, இரசாயன/வேதிப் பொருட்கள் ஆயுத உடன்படிக்கை 1997 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்ததால், இந்த நாளின் அனுசரிப்பிற்கான தேதியாக ஏப்ரல் 29 ஆம் தேதி ஆனது தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இதற்கிடையில், ஏப்ரல் 29 ஆம் தேதி "வேதியியல் ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பின் சர்வதேச ஸ்தாபன தினம்" என்று நியமிக்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் 20வது COP மாநாட்டில் இதற்கான தேதி நவம்பர் 30 ஆக மாற்றப் பட்டது.


# இதரச் செய்திகள்

## டிட்வா புயல்




- டிட்வா புயல் என்பது இலங்கை மற்றும் தென்னிந்தியாவிற்கு கனமழையைக் கொண்டு வந்த ஒரு வெப்பமண்டல புயல் ஆகும்.
- "குளம்" என்று பொருள்படும் "டிட்வா" என்ற பெயர் ஆனது ஏமன் நாட்டினால் வழங்கப் பட்டது (சோகோட்ராவில் உள்ள டெட்வா ஏரியைக் குறிக்கிறது).
- உலக வானிலை அமைப்பின் (WMO) விதிகளின்படி, மணிக்கு 63 கிமீ வேகத்தில் காற்று வீசியதை அடுத்து அது ஒரு புயலாக மாறியது.
- இந்தப் புயல் ஆனது கடலோர இலங்கை வழியாகவும், தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்திற்கு அருகில் தென்மேற்கு வங்காள விரிகுடாவை நோக்கியும் நகர்ந்தது.
- இது 2025 ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் மாதத்தில் பருவமழைக்குப் பிந்தையதாக ஏற்பட்ட மூன்றாவது வங்காள விரிகுடா புயலாகும்.

## சென்யார் புயல்




- சென்யார் புயல் என்பது மலாக்கா ஜலசந்தி மற்றும் வடகிழக்கு இந்தோனேசியாவின் மீது உருவான புயலாகும்.

- "சிங்கம்" என்று பொருள்படும் "சென்யார்" என்ற பெயரை ஐக்கிய அரபு அமீரகம் (UAE) பரிந்துரைத்தது.
- நவம்பர் 26 ஆம் தேதியன்று இந்தப் புயல் வடக்கு சுமத்ராவை (இந்தோனேசியா) தாக்கியது.
- பின்னர் அது மலாக்கா ஜலசந்தியைக் கடந்து நகர்ந்து இந்தோனேசியா, மலேசியா மற்றும் தெற்கு தாய்லாந்தில் பலத்த மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★